**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.107/2025** |
| Deposition of witness | : | P.W.2 |
| Name | : | மைதிலி |
| Father's /Husband Name | : | துரைராமன் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 37 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 23rd day of September 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடவாசல் கிளார் தெருவில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து தெருக்காரர். அ.சா.1 எனது கணவர். கடந்த 17.11.2024 ம் தேதி இரவு 07.30 மணிக்கு எனது மகன்கள் டியூசன் சென்றிருந்தவர்களை அழைத்து வருவதற்காக நான் சென்றிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி மோகன் என்னிடம் உன் புருஷன் எனக்கு சரக்கு வாங்கி கொடுக்கமாட்டானா வாங்கி கொடுக்க சொல்லுடி என்று பேசினார். பின்பு நான் எனது பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தேன். அப்போது எனது வீட்டு வாசலுக்கு வந்த ஆஜர் எதிரி அங்கிருந்த என்னையும் எனது கணவர் மற்றும் எனது தாயாரையும் பார்த்து குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அவ்வாறு ஆஜர் எதிரி எங்களை திட்டியதால் எங்களுக்கு அசிங்கம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி எனது கணவரை கையால் அடித்து வேலியில் தள்ளவிட்டார். அதன்பிறகு ஆஜர் எதிரி எனது கணவரின் விறைப்பையை கிழித்துவிட்டார். அவ்வாறு கிழித்ததில் எனது கணவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது. அங்கிருந்து எதிரி செல்லும் போது இன்னைக்கு தப்பிச்சிட்டடா

என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று எனது கணவரை மிரட்டி விட்டு சென்றார். அவ்வாறு எதிரி எனது கணவரை மிரட்டி சென்றால் நாங்களும் பயந்து கொண்டு தான் இருக்கிறோம். காயமுற்ற எனது கணவரை சிகிச்சைக்காக குடவாசல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். இது சம்மந்தமாக குடவாசல் போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.23 12:57:55 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`